கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் : 23/2021

எனது இலக்கம் : ED/04/59/07/04/01(II)

கல்வி அமைச்சு

இசுருபாய

பத்தரமுல்ல.

2021.11. 30

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளாகள்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வருடாந்த இடமாற்ற ஒழுங்கு விதிமுறைகள்- 2022**

அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கல்லூரி, ஆசிரியர் மத்திய நிலையத்தில் சேவையாற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக இவ் இடமாற்ற ஒழுங்கு விதிமுறைகள் இதன் பின் அமுல்படுத்தப்படவுள்ளது. இதற்கமைய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் முறைகள் கீழ்க் குறிப்பிட்டவாறு அமையும்.

I. வருடாந்த இடமாற்றம்
II. சேவை அவசியம் நிமித்தம் மேற்கொள்ளப்படும் இடமாற்றம்
III. ஒழுக்காற்று நிமித்தம் மேற்கொள்ளப்படும் இடமாற்றம்
IV. அரச அலுவலரின் கோரிக்கைக்கு நிமித்தம் மேற்கொள்ளப்படும் பரஸ்பர இடமாற்றம் (ஒத்து மாறல்)

**2. வருடாந்த இடமாற்றத்திற்காக உட்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள்**

2.1. தற்போது சேவையில் உள்ள இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் I, II மற்றும் III ஆம் தரத்தின் சகல உத்தியோகத்தர்களிடையே (தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, உப பீடாதிபதி மற்றும் ஆசிரியர் கல்லூரி அதிபர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் உட்பட) வருடாந்த இடமாற்றங்களுக்காக உட்படும் உத்தியோகத்தர்கள்,

(அ) ஏதேனுமொரு சேவை இடத்தில் தொடர்ச்சியாக 8 வருடங்கள் அல்லது அதனை விட மேற்பட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள சகல உத்தியோகத்தர்களும் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத போதிலும் இடமாற்றங்களுக்கு உட்படுவார்.

(ஆ) I. தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, உப பீடாதிபதி மற்றும் ஆசிரியர் கல்லூரி அதிபர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் முறையான நியமனம் பெற்ற பதவியில் குறைந்தபட்சம் 5 ஆண்டுகளேனும் சேவையாற்றியிருப்பது இடமாற்றத்திற்காக விண்ணப்பிப்பதற்கான தகைமையாகக் கருத்திற் கொள்ளப்படும்.

II. மேற்குறிப்பிட்ட 2.1 (ஆ) I இன் கீழ் குறிப்பிடப்படாத மற்றைய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் தேசிய கல்வியியற் கல்லூரியில் அல்லது ஆசிரியர் கல்லூரி அல்லது ஆசிரியர் மத்திய நிலையம் அல்லது குறைந்தபட்சம் 02 ஆண்டுகளேனும் சேவையாற்றியிருப்பது இடமாற்றத்திற்காக விண்ணப்பிப்பதற்கான தகைமையாகக் கருத்திற் கொள்ளப்படும்.

2.2. வருடாந்த இடமாற்றங்களுக்குட்படாத உத்தியோகத்தர்கள்.

(அ) உத்தியோகத்தர்களின் கோரிக்கை அல்லது ஏனைய விசேட விடயங்கள் (ஒழுக்காற்று மற்றும் சேவையின் தேவை) இற்கமைய அல்லது அவ்வாறு இன்றேல் பொதுவாக 55 வயதைத் தாண்டிய உத்தியோகத்தர்கள் மாகாணத்திற்கு வெளியே இடமாற்றம் செய்யப்படமாட்டார்கள். அது எவ்வாறாக இருப்பினும் சேவையின் தேவைக்கமைய மாகாணத்திற்குள் இடமாற்றங்களுக்குட்படுவர். இது எவ்வாறாக இருப்பினும் ஒழுக்காற்றுக் காரணங்களுக்கமைய அல்லது சேவையின் தேவைகளுக்கமைய ஆசிரியர் மாணவர்களின் முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் உத்தியோகத்தரை மாகாணத்துக்கு வெளியேயும் இடமாற்றம் செய்ய முடியும்.

(ஆ) வருடாந்த இடமாற்றம் செயற்படுத்தபடும் வருடத்தில் உரிய ஆண்டில் ஜனவரி 01 தொடக்கம் 58 வயதைத் தாண்டிய உத்தியோகத்தர்களை அவர்களின் கோரிக்கைகள் இன்றி மாகாணத்திற்குள் இடமாற்றம் செய்யப்படமாட்டாது.

## 3. வருடாந்த இடமாற்ற சபையின் உள்ளடக்கம்

(i) மேலதிக செயலாளர் (ஆசிரியர் கல்வி நிருவாகம்) - தலைவர்

(ii) பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) - அங்கத்தவர்

(iii) உதவிச் செயலாளர் (ஆசிரியர் கல்வியியலாளர்) - அங்கத்தவர்

(iv) 15% உத்தியோகத்தர் பிரதிநிதித்துவம் கொண்ட சகல கல்வியியலாளர்கள் தொழிற்சங்கத்தினால் பெயரிடப்பட்ட பிரதிநிதி

## 4. வருடாந்த இடமாற்ற யோசனை மீளாய்வுக் குழு

இடமாற்றக் கட்டளை தொடர்பில் மேற்கொள்ளப்படும் மேன்முறையீடுகளை கருத்திற் கொள்வதற்காக வருடாந்த இடமாற்ற யோசனை மீளாய்வுக் குழு தாபிக்கப்பட வேண்டியதுடன் அதன் மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு தீர்மானம் வழங்கப்படும்.

(i) இடமாற்றக் கொள்கைக்கு அமைவல்லாதவாறு மேற்கொள்ளப்பட்ட இடமாற்றம்.

(ii) உத்தியோகத்தரின் கோரிக்கைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட இடமாற்றம் (விண்ணப்பித்தில் குறிப்பிட்ட விருப்பத் தொடர் 1,2,3,4,5 ஆகியன சேவை இடங்களாக கருத்திற் கொள்ளப்படும்).

(iii) இடமாற்றத்திற்காக விண்ணப்பித்த திகதிக்குப் பின்னர் உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்ட திடீர் விபத்து, நோய்வாய்ப்படல் போன்ற மனிதாபிமான நிலைமைகள் தொடர்பில் பிறிதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிறுவன தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை.

4.1. வருாடந்த இடமாற்ற யோசனை மீளாய்வுக் குழுவின் உள்ளீடு

(i) கல்வி அமைச்சின் செயலாளர் - தலைவர்

(ii) சிரேஷ்ட உதவிச் செயலாளர் (கல்வி சேவைத் தாபனம்)

(iii) பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி)

## 5. வருடாந்த இடமாற்றத்தை வழங்கும் போது கருத்திற் கொள்ளப்படும் ஏனைய பொதுவான விடயங்கள்

5.1. வருடாந்த இடமாற்றத்தில் காலம் கணக்கீடு செய்யப்படுவது முன்னைய வருட டிசம்பர் 31 ஆம் திகதியாகும்.

5.2. இடமாற்றத்திற்காக கோரிக்கை விடுக்கும் போது தாம் இடமாற்றம் பெற விரும்பும் 05 இடங்களின் முன்னுரிமைக்கமைய குறிப்பிட்டு உரிய மாதிரிப் படிவம் (இணைப்பு 01) இடமாற்ற விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இக் கோரிக்கைகளுக்கு அமைய கோரிக்கை விடுக்கப்படும் சேவை இடத்திற்கு இடமாற்றத்தை வழங்கக்கூடிய வகையில் சகல சந்தர்ப்பங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன், கோரப்பட்டுள்ள இடத்திற்கு இடமாற்றத்தை வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் இடமாற்ற சபையின் விருப்பத்திற்கமைய அவர்களுக்கு ஏனைய பொருத்தமான சேவை இடம் வழங்கப்படும்.

5.3. மனைவி மற்றும் கணவர் ஆகிய இருவரும் அரச சேவையில் ஈடுபடுவதாயின் அவ் இருவருக்கும் அவர்களின் கோரிக்கைளுக்கமைய ஒரே பிரதேசத்தில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்கு இடமாற்ற சபை சகல சந்தர்ப்பங்களிலும் முயற்சி எடுக்கும்.

5.4. மாற்றுத் திறனாளி பிள்ளைகள், நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டு ஒரே இடத்தில் உள்ள துணைவர் மற்றும் வெளிநாட்டு சென்றுள்ள வேளையில் அங்கீகரிக்கக்கூடிய விடயங்களுடன் தமது நிறுவனப் பொறுப்பாளரின் பரிந்துரையுடன் இடமாற்றம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் கோரிக்கை கருத்திற் கொள்ளப்படும்.

5.5. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களின் 15% பிரதிநிதித்துவத்தைக் கொண்ட தொழிற்சங்கம் தாய்ச் சங்கத்தின் தலைவர்/ செயலாளர்/ பொருளாளர் மற்றும் இடைநிலை நிறைவேற்று சபையின் அங்கத்தவர்களை இடமாற்றம் செய்வதாயின் உரிய தொழிற்சங்கத்தின் செயலாளரின் பரிந்துரையினை கருத்திற் கொண்டு சங்கத்தின் செயற்பாடுகளுக்கு தடை ஏற்படாத இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும். தாபன விதிக் கோவையின் XXV வாசகத்தின் 7 வது பிரிவின் கீழ் அனுசரணையினை பெற்றுக்கௌ்ள எதிர்பார்க்கும் சகல தொழிற் சங்கங்களும் தமது தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் இவ் ஆவணத்தின் 5:17 வாசகத்திற்கமைய உரிய இடமாற்றப் பொறுப்பாளருக்கு இடமாற்ற சபை உரிய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு குறைந்த பட்சம் ஒரு மாதத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.6. இடமாற்றத்திற்கு கோரிக்கை விடுக்கும் உத்தியோகத்தர் கற்பிக்கும் பாடங்கள் மற்றும் அதற்காக கல்வியியற் கல்லூரி ஆணையாளரின் பரிந்துரையினை கருத்திற் கொள்ள வேண்டும்.

5.7. உத்தியோகத்தர் ஒருவரின் துணைவர் பொலிஸ் அல்லது முப்படையில் சேவையாற்றி வட கிழக்கு இராணுவ நடவடிக்கையின் போது அங்கவீனமுற்றதாக எழுத்து மூலச் சாட்சிகள் சமர்ப்பிக்கப்படும் உத்தியோகத்தர் இடமாற்றம் மேற்கொள்ள வேண்டியது அவர்களின் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மாத்திரமாகும். அத்துடன் அவ்வாறான உத்தியோகத்தரின் இடமாற்றக் கோரிக்கைகள் தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படும்.

5.8. இடமாற்றக் குழுவின் பரிந்துரைக்கமைய உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது கல்வியியற் கல்லூரி / ஆசிரியர் மத்திய நிலையம் / ஆசிரியர் கல்லூரி பணியாளர் சபையின் கனிஷ்ட / சிரேஷ்ட சமநிலையினை பாதுகாக்க சகல சந்தர்ப்பங்களிலும் முயற்சி எடுக்கப்பட வேண்டும். மேலும் இவ் உத்தியோகத்தர்களை கல்வியியற் கல்லூரிகளில், ஆசிரியர் கல்லூரிகளில் மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களில் சேவைக்காலம் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

5.9. வருடாந்த இடமாற்ற ஒழுங்கு விதிகளின் 2.1 வாசகத்தின் கீழ் உட்படும் உத்தியோகத்தர் வேறு இடமொன்றுக்கு இடமாற்றம் பெறுவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள வேளையில் அக்கோரிக்கையினை நிறைவேற்றுவதற்காக இங்கு 2.2 வாசகத்தின் தேவை நிவர்த்தி செய்யப்பட்டுள்ள இடத்தில் கூடுதலான சேவைக்காலம் கொண்ட உத்தியோகத்தர் அதற்கு வெளியே இடமாற்றம் செய்ய முடியும்.

5.10. ஒரு சேவை இடத்தில் 8 வருடங்களை விட மேற்பட்ட காலம் சேவையாற்றிய உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியலுக்கமைய உரிய மாதிரிப் படிவங்கள் (இலங்.ஆ.க.சே./வ.இ.மா.02 படி) சரியாக பூர்த்தி செய்யப்பட்டு செயலாளருக்கு வருடாந்தம் 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய பீடாதிபதி/ ஆசிரியர் கல்லூரி அதிபர், முகாமையாளரினால் அனுப்ப வேண்டும்.

5.11. நேர்காணல் குழுவின் பரிந்துரைப்படி முறையாக நியமிக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, உப பீடாதிபதி மற்றும் ஆசிரியர் கல்லூரி அதிபர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் இட மாற்றம் செய்யப்படும்போது அவரது பதிலாளராக நியமிக்கப்படுபவர் முறையாக மேற்குறிப்பிட்ட பதவியொன்றிற்காக நியமிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் I ஆம் தர உத்திகோகத்தர் மட்டுமே.

5.12. இடமாற்றக் கோரிக்கைகளின் போது மற்றும் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கும் போது கருத்திற் கொள்ளப்படுவது அதற்காக வகுக்கப்பட்ட அறிமுகப்படுத்தப்படும் மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பாக மாத்திரமாகும். அவர்களது இடமாற்றத்தின் போது உரிய பதவியில் பொறுப்பேற்றதன் பின்னர், அவ் உத்தியோகத்தர் உரிய பதவிக்கு நியமிக்கப்பட்ட கடிதம் கல்விச் சேவைக் குழுவின் ஊடாக வெளியிடப்படும்.

(அ).

5.13. சகல உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் சரியாக மற்றும் முழுமையான தகவல்களை வழங்க கல்விப் பொறுப்பாளர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். போலி அல்லது பூரணப்படுத்தப்படாத தகவல்கள் அனுப்பப்பட்டிருப்பதாக தெரியவரும் பட்சத்தில் அது தொடர்பில் உரிய நிறுவனங்களின் பொறுப்பாளர் மற்றும் அப்பட்டியலை தயாரித்து மற்றும் சரி பிழையினை பரிசோதனைக்குட்படுத்திய உத்தியோகத்தரின் பொறுப்பு என்பதுடன் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5.14. இடமாற்ற சபையின் மூலம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரை பதிலீட்டாளர்கள் வரும்வரை நிலைப்படுத்தாது உரிய தினம் புதிய சேவை இடத்தில் கடமையை பொறுப்பேற்கக்கூடிய வகையில் விடுவிப்பது உரிய பீட/ நிறுவனப் பொறுப்பாளர்களின் பொறுப்பாக அமைய வேண்டும். இவ் ஒழுங்கு விதிகளுக்குப் புறம்பாக செயற்படும் நிறுவனப் பொறுப்பாளர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

5.15. இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கு (மேன்முறையீட்டினை கருத்திற் கொண்டதன் பின்னர்) அவர்களின் சம்பளம் புதிய சேவை இடத்திற்கு அனுப்பப்படுவதுடன், மேற்கூறப்பட்ட 5.14 இற்கமைய விடுவிக்காது நிலைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்தும் சம்பளக் கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பில் அவ்வவ் நிறுவனப் பொறுப்பாளர்கள் பொறுப்பினை ஏற்றுச் செயற்பட வேண்டும்.

5.16. இடமாற்றம் கிடைக்கும் என எதிர்பார்க்கும் உத்தியோகத்தர்களில் கடமைச் செயற்பாடுகளுக்காக முன்கூட்டியே வேறு உத்தியோகத்தர் ஒருவருக்கு பயிற்சியளித்து வருடாந்த இடமாற்றத்தை உரிய தினத்தில் அமுல்படுத்த திணைக்களப் பொறுப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் பின்னர் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

5.17. இடமாற்றம் பெறுவதற்கு வாய்ப்பிருப்பதாகக் கருதும் எவரேனும் ஒரு உத்தியோகத்தர் சேவையின் தேவைக்கமைய மேலும் ஒரு ஆண்டுகள் தமது நிறுவனத்தில் நிலைப்படுத்த வேண்டுமென தாபனப் பொறுப்பாளரினால் கருதுவதாயின் பரிந்துரை செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் வேளையில் அத்தேவை தொடர்பில் தெளிவுபடுத்தி உரிய நிறுவனப் பொறுப்பாளரின் தனிப்பட்ட பரிந்துரையுடன் கல்விச் செயலாளருக்கு தமது கோரிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும். இடமாற்றக் குழு அது தொடர்பில் கருத்திற் கொண்டு செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒரு வருடம் இவ்வாறு நிலைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தருக்காக மீண்டும் ஒரு முறை வாய்ப்பு வழங்கப்படமாட்டாது.

5.18. இடமாற்றக் கட்டளையினை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்'க சேவை ஆணைக்குழு செயற்பாட்டு ஒழுங்குக் கோவைகள் (குழு இலக்கம் 1) இல் ii வாசகத்தின் ஒழுங்கு விதிமுறைகள் உரியதாகும்.

## 6. வருடாந்த இடமாற்ற கால அட்டவணை

| இல | செயற்பாடுகள் | திகதி |
|---|---|---|
| 01 | வருடாந்த இடமாற்றக் குழுவினைத் தாபித்தல் | 2021 நவம்பர் 01 ஆம் திகதிக்கு முன்னர் |
| 02 | வருடாந்த இடமாற்ற அறிவித்தலை வழங்குதல் | 2021 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் |
| 03 | பூர்த்தி செய்யப்பட்ட வருடாந்த இடமாற்ற விண்ணப்பப்படிவங்களை உரிய பொறுப்பாளருக்கு சமர்ப்பித்தல் | 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் |
| 04 | உரிய பொறுப்பாளரினால் விண்ணபப்படிவங்களை இடமாற்றக் குழுவிற்குக் கையளித்தல் | 2022 ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் |
| 05 | வருடாந்த இடமாற்றக் குழுவின் இடமாற்ற யோசனைகளை உரிய பொறுப்பாளருக்கு எழுத்து மூலம் பொறுப்பளித்தல் | 2022 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் |
| 06 | உத்தேச இடமாற்றம் தொடர்பில் அறிவித்தலை வழங்குதல் மற்றும் வருடாந்த இடமாற்ற யோசனையினை மீளாய்வுக் குழுவிற்குச் சமர்ப்பித்தல் | 2022 பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் |
| 07 | இடமாற்றம் தொடர்பில் மீளாய்வுக் குழுவிற்காக மேன்முறையீடுகளை பொறுப்பளிப்பதை முடிவுறுத்தல் | 2022 பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் |
| 08 | வருடாந்த இடமாற்ற யோசனை மீளாய்வுக் குழுவினால் உத்தேச வருடாந்த இடமாற்றம் தொடர்பிலான தமது எழுத்து மூலப் பரிந்துரையினை உரிய பொறுப்பாளருக்கு எழுத்து மூலம் கையளித்தல் | 2022 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் |
| 09 | இறுதி ஆண்டு இடமாற்றக் கட்டளையினை வெளியிடல் | 2022 ஏப்ரல் 01 ஆம் திகதிக்கு முன்னர் |
| 10 | வருடாந்த இடமாற்றக் கட்டளையினை அமுல்படுத்தல் | 2022 ஜுன் 01 ஆம் திகதிக்கு முன்னர் |

**07. வருடாந்த இடமாற்றக் கட்டளைகளுக்கு எதிராக மேன்முறையீடு சமர்ப்பிப்பது தொடர்பான விபரங்கள்**

7.1. வருடாந்த இடமாற்றம் யோசனை மீளாய்வு குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு எதிராக யாதெனம் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு சமர்ப்பிப்பதாயின் அம்மேன்முறையீடு இணைப்பு 03 இற்கமைய மாத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் தம்மால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இம்மேன்முறையீட்டுடன் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

7.2. ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்காக உத்தியோகத்தரினால் கையளிக்கப்படும் மேன்முறையீடு உரிய சகல கோவைகள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் போன்றனவும் அதற்குரிய தமது மேற்பார்வையுடன், பரிந்துரையுடன் அம்மேன்முறையீடு கிடைக்கப் பெற்று 15 நாட்களுக்குள் இணைப்பு 04 இற்கமைய அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்குரியதாக திணைக்களப் பொறுப்பாளர் மற்றும் பாடத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் பொறுப்பாகச் செயற்பட வேண்டும். அது எவ்வாறாக இருந்த போதிலும் அரச சேவை ஆணைக்குழு செயற்பாட்டு ஒழுங்கு விதிக் கேவையின் XVIII ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்த இடமாற்றம் தொடர்பிலான மேன்முறையீடு உரிய கோவை, ஆவணங்கள், அறிக்கை, மேற்பார்வை மற்றும் பரிந்துரையுடன் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கு முன்னர் அரச சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**8. உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

8.1. யாதேனும் வருடத்தில் இடமாற்றங்களுக்குட்படக்கூடிய உத்தியோகத்தர்கள் இடமாற்றக் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் அவ் உத்தியோகத்தர்கள் இச் சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிமுறைகளின் கீழ் வருடாந்த இடமாற்றங்களுக்குட்பட வேண்டியிருக்கும்.

8.2. வருடாந்த இடமாற்றக் கட்டளை கிடைத்த சகல உத்தியோகத்தர்களும் உரிய தினங்களில் புதிய சேவை இடங்களுக்கு சேவைக்கு சமூகமளிக்கக் கட்டுப்பட்டுள்ளனர்.

9. இலக்கம் 1589/30 மற்றும் 2009.02.20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அரச சேவை ஆணைக்குழு செயற்பாட்டு ஒழுங்கு விதிச் சட்டக் கோவையின் 214, 215, 216 மற்றும் 217 வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் வருடாந்த இடமாற்றத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அமுலில் இருக்கும்.

அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய வெளியிடப்பட்டுள்ளது.

**பேராசிரியர் கே.கபில சீ.கே. பெரேரா**

செயலாளர்

கல்வி அமைச்சு

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவம்**

| பதவி மற்றும் வகுப்பு | | அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் | |
|---|---|---|---|

**அ. தனிப்பட்ட தகவல்கள்**

1. உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ..........................................................................
2. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
3. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ..........................................................................
4. பிறந்த திகதி : ..........................................................................
5. வயது (2022.01.01 ஆம் திகதி): வருடம் ………. மாதம் ………… திகதி ………
6. தேசிய அடையாள அட்டை இல : ..........................................................................
7. ஆண் / பெண் பால் : ..........................................................................
8. நிரந்தர முகவரி : ..........................................................................
9. தற்காலிக முகவரி : ..........................................................................
10. தனிப்பட்ட தொலைபேசி இலக்கம்: ..........................................................................
11. திருமணமானவர்/திருமணமாகாதவர்: ..........................................................................
12. திருமணமாயின்,
    - 12.1 துணைவரின் பெயர் : ..................................................................
    - 12.2 தொழில் மற்றும் சேவை இடம் : ..................................................................
    - 12.3 பிள்ளைகள் தொடர்பான விபரங்கள்

| தொடர் இல | வயது | கல்வி கற்கும் பாடசாலை மற்றும் தரம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**ஆ. சேவைத் தகவல்கள்**

13. தற்போது சேவையாற்றும் இடம் : ..........................................................................
14. அச் சேவை இடத்தின் முகவரி : ..........................................................................
15. கடமைத் தொலைபேசி இலக்கம் : ..........................................................................
16. தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................
17. நியமனக் கடிதத்தின் இலக்கம் மற்றும் திகதி : ..................................................................

18. நியமன விடயம் மற்றும் நியமன மொழி : ……………………………………..

19. பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளதா? : ....................................................

20. சேவை இடம் அமைந்துள்ள மாகாணம் : ....................................................

21. தற்போதைய சேவை இடத்திற் சமூகமளித்த திகதி :

22. தற்போதைய சேவை இடத்தில் சேவைக்காலம் : வருடம்……… மாதம்…… திகதி……
(2021.12.31திகதியன்று)

23. ஆரம்ப சேவை இடம்

| தொடர் இல | சேவை இடம் | தொடக்கம் | வரை | கால எல்லை | |
|---|---|---|---|---|---|
| | | | | வருடம் | மாதம் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

24. நியமன மொழி : ....................................................................

25. நியமனக் கடிதத்திற்கமைய பாடத்துறை : ....................................................................

26. தற்போது பொறுப்புக் கூறும் விடயத்துறை

....................................................................................................................

....................................................................................................................

....................................................................................................................

**இ. இடமாற்றக் கோரிக்கை தொடர்பான தகவல்கள்**

27. தற்போதைய சேவை இடத்திற்கு நியமனம் பெற்று எவ்வளவு காலத்திற்குப் பின்னர் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

: ...............................................................................................................

28. இடமாற்றக் கோரிக்கைக்கான காரணம் :

....................................................................................................................

....................................................................................................................

....................................................................................................................

....................................................................................................................

....................................................................................................................

(வைத்திய காரணத்திற்கமைய கோரிக்கை விடுப்பதாயின் அது வைத்தியச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

29. விசேட காரணங்கள் இருப்பின் : ..............................................................................

30. இடமாற்றம் கோரும் இடம் :

1. ..............................................................................................................
2. ..............................................................................................................
3. ..............................................................................................................
4. ..............................................................................................................
5. ..............................................................................................................

31. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன்.

திகதி .................. ..............................

விண்ணப்பதாரியின் ஒப்பம்

ஈ. பீடாதிபதி / வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை

மேற்கூறப்பட்ட உத்தியோகத்தரின் இடமாற்றக் கோரிக்கையை பதிலீட்டாளருடன் / இன்றி பின்னர் வழங்கும் அடிப்படையில் பரிந்துரை செய்கிறேன்.

.................................... ....................................

திகதி ஒப்பம்

பதவி முத்திரை

உ. பிரதம ஆணையாளரின் பரிந்துரை அல்லது ஆசிரியர் கல்லூரி / ஆசிரியர் மத்திய நிலையத்திற்கான கல்விப் பணிப்பாளர்(ஆசிரியர் கல்வி / நிருவாகி)யின் பரிந்துரை

மேற்கூறப்பட்ட உத்தியோகத்தரின் இடமாற்றக் கோரிக்கையை பதிலீட்டாளருடன் / இன்றி பின்னர் வழங்கும் அடிப்படையில் பரிந்துரை செய்கிறேன்.

.................................... ....................................

திகதி ஒப்பம்

பதவி முத்திரை

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் இடமாற்றம்
தொடர்பான மேன்முறையீடு- மாதிரிப் படிவ இலக்கம் 02

## 2022 வருடாந்த இடமாற்ற மேன்முறையீட்டு விண்ணப்பப்படிவம்

(அ) உத்தியோகத்தரினால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

01. உத்தியோகத்தரின்

1.1. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ............................................................................

1.2 பதவி மற்றும் தரம் :- ............................................................................................

1.3 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் முதல் நியமனத் திகதி :- ..........

1.4 அந் நியமனத் தினத்திற்கு அமைய கடமையைப் பொறுப்பேற்ற திகதி :- ..............

1.5 நியமன விடயம் மற்றும் நியமன மொழி :-..........................................................

1.6 வதியும் முகவரி :- ..................................................................................................

1.7 பிறந்த திகதி:- ........................................................................................................

02. உத்தியோகத்தரின்

2.1. தற்போதைய சேவை இடம் :- ..............................................................................

2.2. அச் சேவை இடத்திற்கு சேவைக்கு சமூகமளித்த திகதி :- ..................................

2.3 முதல் நியமனத் திகதி தொடக்கம் சேவையாற்றியுள்ள இடம் :-

| தொடர் இல | சேவைக் காலம் | | சேவைக் காலம் |
|---|---|---|---|
| | தொடக்கம் | வரை | |
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |
| 04 | | | |

03. இடமாற்றம் தொடர்பான விபரங்கள்

3.1. இடமாற்றம் பெற்றுள்ள சேவை இடம் :- .......................................................

3.2. மேன்முறையீட்டின் மூலம் விண்ணப்பிக்கும் சேவை இடம் :- ............................

3.3. மேன்முறையீட்டிற்கான காரணம் :- ..............................................................

........................................................................................................................
........................................................................................................................

.................................... ......................................................

திகதி உத்தியோகத்தரின் ஒப்பம்

(ஆ) பீடாதிபதி / வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரை

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரின் இடமாற்ற மேன்முறையீட்டுப் படிவத்தை பரிந்துரை செய்கிறேன்.

.................................... ....................................

திகதி

ஒப்பம்
பதவி முத்திரை

(இ) கல்வியியற் கல்லூரி ஆணையாளரின் பரிந்துரை அல்லது ஆசிரியர் கல்லூரி / ஆசிரியர் மத்திய நிலையத்திற்கான கல்விப் பணிப்பாளர் (ஆசிரியர் கல்வி நிருவகம்) இன் பரிந்துரை.

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரின் இடமாற்ற மேன்முறையீட்டுப் படிவத்தை பரிந்துரை செய்கிறேன்.

.................................... ....................................

திகதி

ஒப்பம்
பதவி முத்திரை

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வருடாந்த இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடு - மாதிரிப் படிவ இலக்கம் 03**

**2022 வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு சமர்ப்பித்தல் - மேன்முறையீடு தொடர்பான தகவல்கள்**

**அ. தனிப்பட்ட தகவல்கள்**

<table>
<tr><td>01. முதலெழுத்துக்களுடன் பெயர் :-</td><td colspan="3"></td></tr>
<tr><td>02. பதவி மற்றும் தரம்</td><td colspan="3"></td></tr>
<tr><td>03. பிறந்த திகதி :-<br>YYYY/MM/DD</td><td>04. வயது<br>(2022.01.01 ஆம் திகதியன்று)</td><td>05. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-</td><td>06. ஆண்/பெண் பால்:-</td></tr>
<tr><td>07. நிரந்தர முகவரி :-</td><td>08. தற்காலிக முகவரி :-</td><td colspan="2">09. தொலைபேசி இலக்கம்<br>அலுவலகம் :-<br>தனிப்பட்ட :-</td></tr>
<tr><td>10. திருமணமானவர் / திருமணமாகாதவர் :-</td><td>11. துணைவரின் பெயர் :-</td><td colspan="2">12. துணைவரின் தொழில் மற்றும் சேவை இடம் :-</td></tr>
<tr><td>13. பிள்ளைகளின் எண்ணிக்கை :-</td><td>14. அவர்களின் வயது :-</td><td colspan="2">15. கல்வி பயிலும் பாடசாலை :-</td></tr>
</table>

**ஆ. சேவைத் தகவல்கள்**

<table>
<tr><td colspan="2">16. தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :-</td></tr>
<tr><td>17. தற்போதைய சேவை இடம் :-</td><td>18. சேவை இடம் அமைந்துள்ள நகரம் :-</td></tr>
<tr><td>19. தற்போதைய சேவை இடத்திற்கு சமூகமளித்த திகதி :- YYYY/MM/DD</td><td>20. தற்போதைய சேவை இடத்தில் சேவைக்காலம் (2021.12.31 ஆம் திகதியன்று)<br>வருடம்......... மாதம்......... திகதி.........</td></tr>
<tr><td colspan="2">21. பயன்பெறும் (விருப்பத்திற்குரிய) சேவை இடம்/ இடங்களில் சேவையாற்றப்பட்டுள்ளதா?</td></tr>
</table>

<table>
<tr><td rowspan="7">22. அரச சேவையின் ஆரம்ப சேவை இடம்</td><td colspan="2">சேவை இடங்கள்</td><td>விருப்பத்திற்குரிய சேவை இடம் / விருப்பமற்ற சேவை இடம்</td><td colspan="2">சேவைக் காலம்</td></tr>
<tr><td>1</td><td></td><td></td><td>தொடக்கம்</td><td>வரை</td></tr>
<tr><td>2</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>3</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>4</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>5</td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>6</td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

**இ. இடமாற்றக் கோரிக்கை தொடர்பான தகவல்கள் (உரிய கூட்டினுள் √ அடையாளம் இடவும்)**

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு | உள்ளது | | இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருப்பின் விண்ணப்பித்துள்ள இடங்கள்<br>1.<br>2.<br>3.<br>4.<br>5. |
| | | இல்லை | | |
| இடமாற்றம் பெற்றிருப்பின் அச்சேவை இடம் | | | | |

24. இடமாற்ற சுற்றில் அடங்கும் உத்தியோகத்தர் எண்ணிக்கை ................................

| | | |
|---|---|---|
| 25. இடமாற்ற மீளாய்வுக் குழுவிற்கு விண்ணப்பிக்கப்பட்டு | உள்ளது | |
| | இல்லை | |

26. மீளாய்வுக் குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான தகவல்கள்

| | | |
|---|---|---|
| இடமாற்றத்தை இரத்துச் செய்தல் | | இடமாற்றத்தை மறுசீரமைப்பதற்கு விண்ணப்பித் திருப்பின் அவ்வாறு விண்ணப்பித்த சேவை இடம்<br>01 ..........................................................<br>02 ..........................................................<br>03 .......................................................... |
| மறுசீரமைத்தல் | | |
| புதிய இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்ளல் | | |

| |
|---|
| 27. இடமாற்ற மீளாய்வுக் குழுவின் தீர்மானம் |

28. இடமாற்ற மீளாய்வுக் குழுவின் தீர்மானத்திற்கு எதிராக அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு சமர்ப்பிப்பதற்கான காரணம்

1. ................................................................................................................
2. ................................................................................................................
3. ................................................................................................................

29. மேற்கூறப்பட்ட காரணங்களை உறுதிப்படுத்துவதற்கு உரியதான எழுத்து மூலக் காரணங்களில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் கீழ்க் குறிப்பிட்டவாறு இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு (01) ..........................................................................................

இணைப்பு (02) ..........................................................................................

இணைப்பு (03) ..........................................................................................

30. கோரிக்கை விடுக்கும் நிவாரணம்

1. ................................................................................................................
2. ................................................................................................................
3. ................................................................................................................

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன்.

..............................                                    ....................................

திகதி                                    ஒப்பம்

**ஈ. அமைச்சு / திணைக்களப் பொறுப்பாளரின் பரிந்துரை**

உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட தகவல்கள் அவரின் சுய விபரக் கோவைகளுக்கமைய சரியானது என உறுதிப்படுத்துகிறேன். 2022 வருடாந்த இடமாற்றம் தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டினை பரிந்துரை செய்கிறேன். கீழ்க் குறிப்பிட்ட காரணங்களுக்கமைய பரிந்துரை செய்யவில்லை.

I. ..............................................................................................................

II. ..............................................................................................................

III. ..............................................................................................................

.................................. ......................................

திகதி ஒப்பம்

**உ. இடமாற்றப் பொறுப்பாளரின் பரிந்துரை**

I. இடமாற்றச் சுற்று தொடர்பில் உத்தியோகத்தர் எண்ணிக்கை: ...............................

II. மேன்முறையீடு தொடர்பான பரிந்துரை: ..........................................................

..............................................................................................................

.................................. ......................................

திகதி ஒப்பம்

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வருடாந்த இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடு - மாதிரிப் படிவ இலக்கம் 04

## 2022 வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு சமர்ப்பித்தல் - பதிலீட்டு உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள்

I. மேன்முறையீட்டு உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி: ..................................

II. மேன்முறையீட்டு உத்தியோகத்தர்களுக்குரியதாக பதலீட்டு உத்தியோகத்தர் தொடர்பான தகவல்கள்

**(அ) தனிப்பட்ட தகவல்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. முதலெழுத்துக்களுடன் பெயர் :- | | | |
| 02. பதவி மற்றும் தரம் | | | |
| 03. பிறந்த திகதி :- YYYY/MM/DD | 04. வயது (2022.01.01 ஆம் திகதியன்று) | 05. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- | 06. ஆண்/பெண் பால் :- |
| 07. நிரந்தர முகவரி :- | 08. தற்காலிக முகவரி :- | 09. தொலைபேசி இலக்கம்<br>அலுவலகம் :-<br>தனிப்பட்ட :- | |
| 10. திருமணமானவர் / திருமணமாகாதவர் :- | 11. துணைவரின் பெயர் :- | 12. துணைவரின் தொழில் மற்றும் சேவை இடம் :- | |
| 13. பிள்ளைகளின் எண்ணிக்கை :- | 14. அவர்களின் வயது :- | 15. கல்வி பயிலும் பாடசாலை :- | |

**ஆ. சேவைத் தகவல்கள்**

| | |
|---|---|
| 16. தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :- | |
| 17. தற்போதைய சேவை இடம் :- | 18. சேவை இடம் அமைந்துள்ள நகரம் :- |
| 19. தற்போதைய சேவை இடத்திற்கு சமூகமளித்த திகதி :- YYYY/MM/DD | 20. தற்போதைய சேவை இடத்தில் சேவைக்காலம் (2021.12.31 ஆம் திகதியன்று)<br>வருடம்......... மாதம்......... திகதி......... |
| 21. பயன்பெறும் (விருப்பத்திற்குரிய) சேவை இடம்/ இடங்களில் சேவையாற்றப்பட்டுள்ளதா? | |

| 22. அரச சேவையின் ஆரம்ப சேவை இடம் | | சேவை இடங்கள் | விருப்பத்திற்குரிய சேவை இடம் / விருப்பமற்ற சேவை இடம் | சேவைக் காலம் | |
|---|---|---|---|---|---|
| | 1 | | | தொடக்கம் | வரை |
| | 2 | | | | |
| | 3 | | | | |
| | 4 | | | | |
| | 5 | | | | |
| | 6 | | | | |

**இ. இடமாற்றக் கோரிக்கை தொடர்பான தகவல்கள் (உரிய கூட்டினுள் √ அடையாளம் இடவும்)**

| | | | | |
|---|---|---|---|---|
| 23 | வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டு | உள்ளது | | இடமாற்றத்தை மறுசீரமைப்பதற்கு விண்ணப்பித்திருப்பின் அவ்வாறு விண்ணப்பித்த சேவை இடம்<br>1.<br>2.<br>3. |
| | | இல்லை | | |
| இடமாற்றம் பெற்றிருப்பின் அச்சேவை இடம் | | | | |

| | | |
|---|---|---|
| 24. இடமாற்ற மீளாய்வுக் குழுவிற்கு விண்ணப்பிக்கப்பட்டு | உள்ளது | |
| | இல்லை | |

25. மீளாய்வுக் குழுவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள கோரிக்கை

| | | |
|---|---|---|
| இடமாற்றத்தை இரத்துச் செய்தல் | | இடமாற்றம் மறுசீரமைக்கப்பட வேண்டும் / புதிய இடமாற்றம் வழங்க வேண்டிய சேவை இடம்<br>01 ..................................................................<br>02 ..................................................................<br>03 .................................................................. |
| மறுசீரமைத்தல் | | |
| புதிய இடமாற்றத்தைப் பெற்றுக் கொள்ளல் | | |

| |
|---|
| 26. இடமாற்ற மீளாய்வுக் குழுவின் தீர்மானம் |

27. அரச சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா?

.......................................................................................................................

28. மேன்முறையீட்டாளரின் கோரிக்கை நிறைவேற்றப்படும் பட்சத்தில் பதிலீட்டு உத்தியோகத்தர்களுக்கு பாதிப்புக்கள் அற்றவாறு இடமாற்றச் சுற்றினை அமுல்படுத்துவது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் பரிந்துரை :

.......................................................................................................................
.......................................................................................................................
.......................................................................................................................
...............................................................

மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துகிறேன்.

திகதி ..............................                                                ...................................

ஒப்பம்

இ.ஆ.க.சே/வ.இ.மா/02

இல.ஆ.க.சே./வ.இ.மா/02

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தற்போதைய இடத்தில் 08 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை கொண்டுள்ள உத்தியோகத்தர்களின் பட்டியல்**

| தொடர் இலக்கம் | பெயர் | வயது | சேவைக் காலம் | வதியும் பிரதேசம் | இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கு மிகவும் விருப்பதான மூன்று இடங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |